**கம்பஹா பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பஹா பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கம்பஹா பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 3.9 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தகவல்களை ஒப்பீடு செய்வதற்கு இலகுவான வகையில் உள்ளபடியான, | 2022 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அந்த தகவல்களுடன் சமர்ப்பிக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| பாதீடு செய்யப்பட்ட மற்றும் முன்னர் சமமான காலப்பகுதியில் உள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய பெறுமதிகளுக்கும் இடையே ஏதாவது பொருண்மையான வேறுபாடுகள் உள்ளதாயின் அவற்றிற்கான காரணம் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நிதிக்கூற்றுக்களில் விடயங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) நியம இலக்கம் 10.22(ஊ) இன் பிரகாரம் கணக்கு காலப்பகுதியின் போது அறவிட முடியாததாக, மாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் கிடைக்க வேண்டியதாக பதிவழித்தல், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரத்துடன் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் நாட்குறிப்பு இலக்கம் 26 இன் மூலம் கூட்டுமொத்தமாக ரூபா 1,045,124 ஆன கடை வாடகை பதிவழித்தல் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டிய 06 விடயங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 605,892 தொகை வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 இற்குரிய வைப்பாக ஆவணங்களுக்கு கொண்டு வரப்பட்ட நிர்வாக செலவினம், 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள வருமானம், வருமானமாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முன்னைய ஆண்டில் வீதிகள், பாலங்கள், மதகுகள், நடைமுறை வேலை மீதியான ரூபா 319,231,822 இற்கு மேலதிகமாக அந்த பணிகளுக்குரிய மீளாய்வாண்டில் நிறைவேற்றலாக ரூபா 8,498,839 தொகை அந்தக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக ரூபா 8,498,839 இனால் நடைமுறைப் பொறுப்புக்களின் மீதி அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கிடு செய்தல் வேண்டும். |
| (இ) | களஞ்சிய கடன்கொடுத்தோருக்காக ரூபா 20,592,348 செலுத்தும் போது, களஞ்சியக் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு பதிலாக பிழையாக செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமை சரி செய்யும் போது உரிய செலவினக் கணக்கு செலவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ரூபா 20,592,348 இனால் ஆண்டின் மிகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற மூலதன மானியத்திற்காக 2021 ஆம் ஆண்டின் போது காலக்கழிவு செய்ய வேண்டிய பெறுமதி ரூபா 13,031,174 ஆனமையால் விரிவான வருமானக் கூற்றில் வருமானத்தின் கீழ் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்திலிருந்து கிடைத்த மாற்றலாக அப்பெறுமதி காண்பிக்கப்பட | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் ரூபா 11,726,122 காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 1,305,052 குறைவாகவும், மூலதன மானியம் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் ரூபா 13,031,174 தொகை 2020 ஆம் ஆண்டில் காலக்கழிவாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியால் திரண்ட நிதிய மீதி அதிகரித்தும் மூலதன மானியம் குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு விரிவான வருமானக்கூற்றில் பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 193,284,969 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அந்த தகவல்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஊ) | 2021 சனவரி 01 இல் உள்ளவாறு வீதிகள், பாலம், மதகுகளின் மீதி ரூபா 1,997,297,192 இற்காக 10 சதவீதத்தின் பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 199,729,719 ஆக இருந்த போதும் நாட்குறிப்பு இலக்கம் 56 இன் மூலம் ரூபா 171,631,349 தொகை கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக திரண்ட நிதியம் மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 28,098,370 வீதம் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | பிரதேச சபை நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி 90 இன் பிரகாரம் | முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் வருடாந்த சிட்டையிடலை | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டண |

| | | |
|---|---|---|
| வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் முத்திரைக்கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பண வருமானங்கள் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தீர்மானித்து சமர்ப்பிக்காமையினால் இந்த வருமானம் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்படுமாயின் பிழையான நிலுவை காண்பிக்கப்படுகின்ற மையால் காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | பட்டோலைகளை பெற்று பிரதேச சபை நிதி நிர்வாகங்களுக் குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதியின் பிரகாரம் வருமானங்களை அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்

#### (அ) பெறவேண்டிய மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபை செயற்திட்டங்கள் 540 இற்காக கிடைக்க வேண்டிய மீதி ரூபா 181,167,226 ஆக காணப்பட்டது. காலப்பகுப்பாய்வின் பிரகாரம் நிலுவையாக காணப்பட்ட காலம் 11 மீதிகளுக்குரிய ரூபா 1,438,098 தொகை 05 இற்கும் 10 வருடங்களுக்கு இடையிலும், 83 மீதிகளுக்குரிய ரூபா 5,464,170 தொகை 3 இற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலும், 231 மீதிகளுக்குரிய ரூபா 16,808,254 தொகை 1 இற்கும் 3 வருடங்களுக்கு இடையிலும், 215 மீதிகளுக்குரிய ரூபா 157,456,704 தொகை 1 வருடத்திற்கு குறைவாகவும் காணப்பட்டதுடன் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன்பட்டோர் மீதி பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபை செயற்திட்டங்களுக்காக கிடைக்க வேண்டிய பணமாகும். ஏனைய நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய பணத்தை பதிவழிக்க முடியாது. பணம் கிடைக்க வேண்டிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பணத்தை அனுப்புவதில் தாமதம் மற்றும் எழுத்துமூலம் பதில் அளிக்கப்படாமையின் அடிப்படையில் கடன்பட்டோர் மீதியாக காணப்படுகின்றது. | மூலதன உதவி கடன்பட்டோர் பட்டோலை பகுப்பாய்வு செய்து பொருத்தமான திட்ட முறைமை யொன்றின் மூலம் நிலுவை மீதியை அறவிடல் மற்றும் உரிய கோவைகளை பரீட்சித்து கடன்பட்டோர் தன்மையை உறுதிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) செலுத்த வேண்டிய மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன்கொடுத்தோர் பட்டோலையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் வரையில் 25 பல்வேறு அரசாங்க நிறுவனங்களுக்குரிய 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற 39 மீதிகளுக்குரிய செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 4,262,322 தொகை காணப்பட்டதுடன் அந்த மீதிகள் தொடர்பாக கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்ந்தும் தீர்த்து வைக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலியக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(2) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி ரூபா 40,807,119 தொகை காலாவதியான 64 வைப்புக்களுக்காக உரிய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்குள் வருமானத்திற்கு எடுத்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் காலாவதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது மீள செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1940 இன் 30 ஆம் இலக்க மதிப்பீட்டுச் சட்டம் | 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீட்டுத் திணைக்களத்தை அழைத்து ஆதனவரி அறவிடுவதற்காக மதிப்பீடொன்று செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2002 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை | 2018 ஆம் ஆண்டில் புதிய மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ஹெரனங்கொட உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் புதிய மதிப்பீட்டு வீதத்தை பெற்று ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடிப்படையாகக் கொண்டு வரி அறவிடப்படுகின்றது. | கலகிட்டியாவ உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனவரி அறவிடல் மேற்கொள்ளப்படும். | |
| (இ) | 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய 2155/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் விதிக்கப்பட்ட மேல் மாகாண பிரதேச சபை நிதி நிர்வாகங்களுக்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை இலக்கம் 83(ii) | பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் ரூபா 24,045,436 ஆன ஊழியர் கடனுக்கான தனியான முற்பணக் கணக்கு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் ஊழியர் கடனுக்காக தனிப்பட்ட முற்பணக் கணக்கு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வர்த்தமானி பத்திரத்தின் கட்டளையின் பிரகாரம் ஊழியர் கடனுக்காக தனியாக முற்பணக் கணக்கு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,806,233 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 52,803,165 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கெனரத்கொட உப அலுவலகத்திலிருந்து கிடைக்க வேண்டிய ஆதனவரி மீதி ரூபா | காலப்பகுதிப்பாய்வில் சரியான தரவின் பிரகாரம் பெற்றக் கொள்வதற்கு தயாரித்து உடனடியாக கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| 26,537,646 இற்கான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாதிருந்த துடன் கலகிட்டியாவ உப அலுவலகத்தின் காலப்பகுப்பாய்வு அறிக்கையின் படி அறவீடுகள் நிலுவையான காலம் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 5,904,379 தொகையும், 05 இற்கும் 10 வருடங்களுக்கு இடையிலான மீதி 3,257,257 தொகையும், 3 இற்கும் 5 வருடங்களுக்கு இடையிலான மீதி ரூபா 1,785,800 தொகையும், 01 இற்கும் 03 வருடங்களுக்கு இடையிலான மீதி ரூபா 1,140,000 தொகையும், 01 வருடத்திற்கு குறைந்த மீதி ரூபா 313,255 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 12,400,692 மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) கடை வாடகை

---------------------------

| | | |
|---|---|---|
| தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில் 04 கடைகளுக்குரிய ரூபா 264,544 தொகை மற்றும் வெலிவேரிய பொதுச் சந்தையில் ஒரு கடைக்குரிய ரூபா 70,400 தொகை என்பவற்றின் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட காலம் 05 வருடங்களுக்கு மேற்பட்டும், வெலிவேரிய பொதுச் சந்தையில் 05 கடைகளுக்குரிய ரூபா 452,420 தொகை மற்றும் பிரதான அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தில் 02 கடைகளுக்குரிய ரூபா 30,450 தொகையை அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட காலம் 3 இற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலானதாக இருந்தது. | அறவிட முடியாத கடை வாடகை தொடர்பாக கம்பஹா உதவி உள்ளூராட்சி ஆணையாளர் வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில் விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடை வாடகை உரிமையாளர் களிடமிருந்து அல்லது அறவீடுகளை புறக்கணித்த தரப்பினரை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. மனிதவள முகாமைத்துவம்**

**ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர் கடன் பட்டோலையின் பிரகாரம் ஓய்வுபெற்றுச் சென்ற, மரணமடைந்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற 12 உத்தியோகத்தர்களிடமிருந்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் அறவீடுகள் நிலுவையான மீதி ரூபா 492,602 தொகை 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட ஊழியர்களின் கடன் மீதியை பிணையாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்றது. | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்காக இனங்காணப்பட்டிருந்த 70 செயற்பாடுகளின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5,542,000 ஆன 22 செயற்பாடுகள் நடப்பாண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட Covid தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அந்த ஆண்டில் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்த நிகழ்ச்சித் திட்டங்கள் 2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்க செலவின கட்டுப்பாட்டிற்காக 2022 ஏப்ரல் 26 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 இற்கு கவனம் செலுத்தி அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சரியான தேவையினை இனங்கண்டு நிதியேற்பாட்டை ஒதுக்குதல் மற்றும் தேவையின் பிரகாரம் திருத்தப்பட்ட மதிப்பீட்டை அங்கீகரித்து செலவினங்களை செய்தல் வேண்டும். |